Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ ஜூன் ௴ 6 ௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 12

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

சென்ற வாரம், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் ஜெர்மனியின் வடக்குக் கரையோரப் பிரதேசத்தின் மேல் பறந்து, அக்கினிக் குண்டுகளையும், கடுமையான வெடி குண்டுகளையும் போட்டன என்று ஒரு ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

வடமேற்கு ஜெர்மனியில், முக்கியமான லட்சியங்களின்மேல், பிரிட்டிஷ் வெடிகுண்டுபடையின் ஒரு சிறு பகுதி, வெடிகுண்டுகளைப்போட்டது. விமானங்கள் பறந்து செல்வதற்கு காலநிலை அசௌகரியங்கள் பல இருந்தன. இந்தத் தாக்குதலில், ஒரு பிரிட்டிஷ் விமானம் இழக்கப்பட்டது. வடமேற்கு ஜெர்மனியில் உள்ள தொழிற்சாலைப் பிரதேசங்கள் மேலும், துறைமுகப் பட்டணங்கள் மேலும் வெடி குண்டுகள் போடப்பட்டன.

ஹாம்பர்க், கீல், வில்ஹெம்ஷேவன் என்ற ஜெர்மன் பட்டணங்கள், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டு அடைந்த சேதங்களைப்பற்றிய விவரங்களை, பிரிட்டிஷ் விமான மந்திரி சபையின் சமாச்சார நிலையம் பிரசுரித்திருக்கிறது. புதிய முறையில் சமீபத்தில் செய்யப்பட்ட பிரிட்டிஷ் வெடிகுண்டுகள் ஜெர்மனியில் ஏராளமான சேதத்தை உண்டாக்கியிருக்கின்றன என்றும், அதை மறைப்பதற்காக, லண்டனில் நடந்த வெடிகுண்டுத்தாக்குதலை, பர்லினில் நடந்த தாக்குதலுக்கு ஒப்பிட்டு ஜெர்மானிய அதிகாரிகள் உண்மையை மறைக்க முயலுகிறார்களென்றும், தெரிகிறது.

ஹாம்பர்க்கில், ஸ்டீன்வர்தர் என்ற தொழிற்சாலை பிரதேசத்தில், இந்தப் புதிய பிரிட்டிஷ் வெடி குண்டுகளில் ஒன்று விழுந்தது. அதன் பயனாக, 20,000 சதுர கஜ விஸ்தீரணமுள்ள இடத்தில் இருந்த தொழிற்சாலைக் கட்டடங்கள் முழுதும் இடிந்து விழுந்தன. வெடி குண்டு வெடித்த அதிர்ச்சியினால், 75,000 சதுர கஜ விஸ்தீரணமுள்ள இடத்தில் இருந்த கட்டடங்கள் முதலியவற்றிற்குச் சேதம் உண்டாயிற்று. 1,100 அடி தூரமுள்ள இரண்டு இடங்களில், சீக்கிரம் வெடி குண்டு வெடித்தது நன்றாய்ப் புலப்பட்டது. ஹாம்பர்க் என்ற பட்டணம் வெடிகுண்டுகளால் முழுதும் உருமாற்றப்பட்டது. ஜெர்மனி தேசத்திலேயே இரண்டாவது பெரிய பட்டணம் ஹாம்பர்க் தான். அதன் மேல் மே மாத மெல்லாம் போடப்பட்ட ஏராளமான அக்கினிக் குண்டுகளும், வெடிகுண்டுகளும், எவ்வளவு அதிகமான சேதம் விளைவித்திருக்கின்றன என்பதை அறிய முடியாது. ஆகாய விமானங்களிலிருந்து படமெடுத்துப் பார்த்ததில், தொழிற்சாலை கட்டடங்களில் மிகப் பெரிய கட்டடங்கள் 36 இடிந்து விழுந்தன என்று தெரிகிறது.

இதைப் போல, மான்ஹீம் பிரதேசத்தில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள கப்பற்சாலைகள் பழுதடைந்தன. தொழிற்சாலைப் பிரதேசமாகிய லட்விக் ஷேவன் என்ற இடத்தில் உள்ள ரசாயனச் சாலை, வெடி குண்டுகளால் தாக்கப்பட்டு சேதமடைந்தது. வெர்பிந்துங்ஸ் கால்வாயின் இரண்டு கரைகளிலும் இருந்த சாமான்கள் வைக்கும் 16 சாலைகள் நெருப்புக்கிரையாய்விட்டன. முழுதும் நாசமடைந்த இந்தப் பிரதேசம் $4\frac{1}{2}$ ஏக்கர் விஸ்திரணமுள்ளது.

ரைன் நதிக்கரைக்கருகிலிருந்த பண்டகசாலைகள் நெருப்புப்பற்றி எரிந்துபோய்விட்டன. சிலநாட்களுக்குப் பிறகு கூட நெருப்பு புகைந்துகொண்டேயிருந்ததென்று வேவுபார்த்த விமான ஓட்டிகள் கூறினார்கள். ரைன் நதிப் பாலத்தின் கிழக்கு பாகம் வெடிகுண்டுகளினால் தாக்கப்பட்டு, இடிந்து ஆற்றில் விழுந்துவிட்டது. பாலத்தின் ஒருபாகம் ஆற்றில் விழுந்துவிட்டபடியால் வண்டிகளின் போக்கு வரத்து நின்றிருக்கிறது.

கலோன் என்ற ஜெர்மன் தொழிற்சாலைப் பட்டணம் தொடர்ச்சியாக இரண்டு இரவு பலமாகத் தாக்கப்பட்டது.

சென்ற வாரம், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பல பிரதேசங்களை, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை தாக்கியிருக்கிறது. பிரிட்டனி என்ற பிரெஞ்சு மாகாணத்தில் லானியன் என்ற இடத்திலுள்ள எதிரிகளின் ஆகாய விமானச்சாலை தாக்கப்பட்டது. பிரிட்டிஷ் விமானங்கள் தரையிலிருந்து சில அடிகள் உயரத்தில் பறந்து, கீழே இருந்த 7 ஆகாய விமானங்களை அடியோடு நாசம் செய்துவிட்டு, இன்னும் பல விமானங்களை சேதப்படுத்தி, விமானங்கள் தங்குமிடத்தைத் தாக்கி அழித்துவிட்டு வந்துவிட்டன. அவைகள் திரும்பிவரும்போது, லானியன் விமானச்சாலை பெரும் புகையினால் மறைக்கப்பட்டுவிட்டது.

பலோன், செயின்ட் நாசேர் என்ற இடங்களிலுள்ள துறைமுகங்களும், ஆகாய விமானச்சாலைகளும் தாக்கப்பட்டன. எதிரிகள் ஆதிக்கத்திலுள்ள கரையோரங்களைத் தாக்கியதில், குறைந்தபட்சம் 10 கப்பல்கள் வெடிகுண்டுபட்டு சேதப்படுத்தப்பட்டன; சில கப்பல்கள் நெருப்புப்பற்றிக்கொண்டு எரிந்து போய்விட்டன. நான்கு கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன. இங்கிலீஷ் கால்வாயிலும், எதிரிகளின் கரையோரப் பிரதேசங்களிலும், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கியதின் பயனாக, எட்டு விமானங்கள் பிரிட்டனுக்கு நஷ்டமாய்விட்டன. இந்த விமானப் போரில், இரண்டு ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

பிரெஞ்சு தேசத்தின் கரையோரப் பிரதேசத்தின் மேலும், டோவர் ஜலசந்தி பிரதேசத்தின் மேலும், பிரிட்டிஷ் விமானங்கள் பகல் நேரத்தில் பறந்து வெடிகுண்டுகளைப் போட்டன. எதிரிகளின் விமானங்கள் அவைகளைத் தடுத்துப் போர் புரிந்தன. இந்த விமானப் போரில், ஒரு எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது; பிரிட்டிஷ் விமானங்களுக்கு யாதொரு நஷ்டமுமில்லை. எதிரிகளின் "சப்ளை" கப்பல் ஒன்று பழுதாக்கப்பட்டது.

சென்ற வாரம், ஜெர்மன் ஆகாய விமானங்கள் பிரிட்டிஷ் கப்பல்களைத் தாக்க முயற்சித்தன. அவைகளை பிரிட்டிஷ் விமானங்கள் துரத்திக்கொண்டு போய், பல எதிரி விமானங்களை நாசம் செய்தன. ஒரு "ஹரிகேன்" விமானம், ஜெர்மன் விமானமொன்றோடு கடும் போர் புரிந்து அதைச் சுட்டு வீழ்த்தியது. இந்த சண்டையில் இரண்டு பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன.

வடக்கு இங்கிலாந்தில் இருக்கும் லிவர்பூல் என்ற தொழிலாளர் பட்டணத்தின்மேல் ஜெர்மன் விமானங்கள் பல வெடிகுண்டுகளைப் போட்டன. பலர் காயமடைந்தார்கள்; ஒருவர் உயிரிழந்தார். தொழிலாளர் வசிக்கும் வீடுகள் பல, வெடிகுண்டுகளினால் சேதமடைந்தன. பல அக்கினிக் குண்டுகள் போடப்பட்டன. மர்சிசைட் பிரதேசத்தில் பல வெடி குண்டுகள் விழுந்தன; ஆனால் பெருஞ் சேதம் ஒன்றும் ஏற்படவில்லை.

பிரிட்டிஷ் கரையோரத்தில் வடமேற்கு, கிழக்கு, தென்கிழக்கு பிரதேசங்கள் தாக்கப்பட்டன. தென்

கிழக்கில் ஒரு இடத்தில், அநேகர் வீடில்லாமல் தவிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது.

மேமீ 24-ந் தேதியோடு முடிந்த வாரத்தில், பிரிட்டனில் நடந்த விமானப் போரில் 11 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஆறு பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன ; ஆனால் மூன்று விமான ஓட்டிகள் தப்புவிக்கப்பட்டார்கள்.

பிரிட்டனில், விமானக் குண்டுகளினால் ஏற்படும் பெரிய நெருப்புகளைக் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்காக, ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி, அந்தந்த பிரதேசத்தில் உள்ள 50 வயதுக்குட்பட்ட ஆண்கள் ஒரு மாதத்தில் 48 மணி நேரம் கவனிப்பு வேலை செய்யவேண்டும்.

லண்டனில் உள்ள செயின்ட் பார்த்தாலமியூ ஆஸ்பத்திரி பலதடவை வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. ஆனால் ஆஸ்பத்திரி வேலைகள் வழக்கம் போல் நடைபெற்றுவருகின்றன. ஒரு நாளிரவு மூன்று வெடிகுண்டுகள் ஆஸ்பத்திரியின்மேல் விழுந்தன. ஆஸ்பத்திரியின் நிர்வாகிகளின் குமாஸ்தா வீட்டில் ஒரு வெடிகுண்டு விழுந்தது ; மற்றொன்று மாணவர்கள் வசிக்கும் கட்டடத்தின் மேற்கு பாகத்தில் விழுந்தது ; வேறொரு வெடிகுண்டு ஆஸ்பத்திரிக்குட் செல்லும் பாதையில் விழுந்தது. ஆனால் உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்படவில்லை. 240 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்ட "ஹாலு" க்குச் சேதமில்லை. செயிண்ட் பார்த்தாலமியூ ஆஸ்பத்திரி உலகத்திலேயே மிகப்பெரியதும், பழமையானதுமான ஆஸ்பத்திரி. அது 800 வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டது.

அயர்லாந்தின் தலைநகரான டப்ளினின்மேல் ஜெர்மன் விமானங்கள் முதல் தடவையாக வெடிகுண்டுகளைப்போட்டன. ஒருபாகத்தில் வரிசையாக இருந்த சில கடைகளும் வீடுகளும் நாசமாக்கப்பட்டன. சில வெடிகுண்டுகள் அயர்லாந்தின் பிரசிடெண்டு, ஹைட் அவர்களின் வீட்டிற்கருகில் விழுந்தன. பிரசிடெண்டின் வீட்டு ஜன்னல் உடைந்து வீழ்ந்தது. அமெரிக்க ஸ்தானீகர் காரியாலயத்தின் முன்கதவுக்குமேலிருக்கும் ஆகாய வெளிச்ச ஜன்னல் உடைந்துபோய் விட்டது. அமெரிக்க ஸ்தானீகர், மிஸ்டர் டேவிட் கிரே அவர்களும், அவருடைய மனைவியும் (இவர் மிஸஸ் ரூஸ்வெல்டின் சொந்தக்காரர்) விமான சப்தம் கேட்டு எழுந்திருந்தார்கள். பிறகு அயர்லாந்தின் தரைப்படை ஜெர்மன் விமானங்களைத் தாக்குவதைப் பார்த்தார்கள். டப்ளினிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகள் மிகக் கடுமையாக ஜெர்மன் விமானங்களைச் சுட்டன. அவைகள் இடைவிடாது சுட்டுக்கொண்டிருந்ததினால், ஸ்தானீகரின் காரியாலய ஜன்னல்களும், கதவுகளும், அதிர்ச்சியினால் படபட வென்று அடித்துக்கொண்டேயிருந்தன, என்று மிஸ்டர் கிரே கூறினார்.

டப்ளினில் நடந்த வெடிகுண்டுத் தாக்குதலினால், இறந்தவர்கள் சுமார் 40 பேர் இருக்கலாம். காயமடைந்தவர்களில் 60 பேர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

வடக்கு அயர்லாந்தில் உள்ள பெல்பாஸ்டு நகரம் தாக்கப்பட்டு, 30 மாதாகோவில்கள் சேதமடைந்தன. மே மாதத்தில் நடந்த விமானப் போர்களில் உண்டான சேதத்தைப்பற்றி ஒரு அரசாங்க அறிக்கை லண்டனில் வெளியிடப்பட்டிருக்கிறது. பிரிட்டனிலும், பிரிட்டிஷ் கரையோரப் பிரதேசங்களிலும், சேதமடைந்த ஜெர்மன் விமானங்கள் 205 ; பிரிட்டிஷ் விமானங்கள் 18. ஜெர்மனியிலும், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளிலும், ஜெர்மனி 31 விமானங்களை இழந்தது ; பிரிட்டன் 67 விமானங்களை இழந்தது. மத்தியதரைக்கடல் அரங்கத்தில், ஜெர்மனி இழந்தது 268 விமானங்கள் ; பிரிட்டன் இழந்தது 66 விமானங்கள். கடலில் மூழ்கிய விமானங்கள் ஜெர்மனியினுடையது 25 ; பிரிட்டனுடையது 2.

இங்கிலாந்தின் வடமேற்குத் தொழிற்சாலைப் பட்டணமாகிய மான்செஸ்டர்மேல், ஜெர்மன் விமானங்கள் தொடர்ச்சியாக வெடிகுண்டுகளைப் போட்டன. ஆயிரம் அக்கினிக்குண்டுகளும், அநேக டன் எடையுள்ள வெடிகுண்டுகளும், தாறுமாறாகப் பல இடங்களில் போடப்பட்டன. ஏழைமக்கள் வசிக்கும்படியான பாகத்தில் உள்ள மாதாகோவில்கள், ஆஸ்பத்திரிகள், வீடுகள் முதலியவைகள் பல சேதமடைந்தன. இங்கிலாந்தின் வடமேற்கு பாகத்திலும், வட மத்திய பாகத்திலும், ஜெர்மன் விமானங்கள் தாக்கின. இந்தப் போரில், இரண்டு ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

லண்டனில் ஏழைமக்கள் பிரார்த்தனைசெய்யும் சவுத் வார்க் மாதாகோவில், வெடிகுண்டுகளால் சேதமாக்கப்பட்டது. ஆனால் இடிந்த சுவர்களுக்கிடையே, அனுஜோ என்ற கத்தோலிக்க பாதிரி பிரார்த்தனை நடத்தினார். அந்தப் பிரதேசத்திலுள்ள 700 பேர் பிரார்த்தனைக்கு வந்திருந்தார்கள்.

வடகிழக்கு இங்கிலாந்திலும், கிழக்கு இங்கிலாந்திலும், ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

லண்டன் பல இரவுகளாக விமானத் தாக்குதல் இல்லாமல் இருக்கிறது. அப்படி தொடர்ச்சியாக 24-வது இரவில் லண்டன்மேல் வெடிகுண்டுகள் விழவில்லை.

சென்ற செவ்வாய்க்கிழமை இரவு, பிரிட்டன் மேல் பறந்த மூன்று ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. புதன்கிழமையன்று, சில விமானங்கள் பிரிட்டன்மேல் பறந்து சென்றன. எங்கும் வெடி குண்டுகள் போட்டதாகத் தெரியவில்லை.

லூஹேவர் என்ற பிரெஞ்சுத் துறைமுகத்தை, பட்டப்பகலில் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. அதிக கீழாகப் பறந்து, வெடிகுண்டுகளைத் துறைமுகத்தின்மேல் போட்டன. சேர்பர்க்குக்கு அருகிலுள்ள ஆக்டெவில் என்ற இடத்திலிருக்கும் ஆகாய விமானச் சாலை தாக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் ஜெர்மன் தலைநகராகிய பர்லின்மேல் வெடிகுண்டுகளைப் போட்டன ; பல இடங்களில் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்தது. தூசல்தார்ப், ஆஸ்டெண்டு கப்பற்சாலைகள், செயின்ட் நாசேர் கப்பற்சாலைகள், கீல் கால்வாய், முதலிய இடங்கள் பலமாய்த் தாக்கப்பட்டன. வடக்கு ஜெர்மனியிலும், வடமேற்கு ஜெர்மனியிலும், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின என்று ஜெர்மன் ரேடியோ கூறுகிறது.

## 2. ஆப்பிரிக்காவும், மத்திய தரைக்கடலும்.

கிரீட்டில், 12 நாள் கடும்போர் நடந்த பிறகு, பிரிட்டிஷ் துருப்புகள் 15,000 பேர் எகிப்துக்குப் பின்வாங்கிச் சென்றனர். எதிரிகளுடைய துருப்புகளுக்கும், ஆகாய விமானங்களுக்கும், நேசதேசத் துருப்புகள் பெருஞ்சேதம் விளைவித்திருக்கின்றன. இருந்தபோதிலும், பிரிட்டிஷ் ராணுவப் படைகளும், கடற்படைகளும், அதிகமான ஆகாய விமான பலம் இல்லாமல் கிரீட்டில் நீண்டகாலம் இருக்கமுடியாது. ஆனால், ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் விமானத் தளங்களிலிருந்து வந்த உதவி போதுமானதாயில்லை. ஆகவே, பிரிட்டிஷ் துருப்புகளும், நேசதேசத் துருப்புகளும், கிரீட்டை விட்டுவிட்டு, எகிப்துக்குச் சென்றுவிட்டன. கிரீட்டில் அவைகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டதென்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம்.

மேலே குறித்த விவரங்கள், பிரிட்டிஷ் யுத்தக் காரியாலயத்திலிருந்து வந்த ஒரு அறிக்கையில் காணப்படுகின்றன. 15,000 என்று குறிப்பிட்டது நேசதேசத் துருப்புகளை மாத்திரம்தான் ; கிரீட்டிலிருந்து வெளிவந்த கிரேக்கத் துருப்புகளின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை.

எகிப்துக்கு வந்த துருப்புகளுடன் ஜெனரல் பிரேபர்க் (நியூஜிலந்தின் பிரதம தளகர்த்தர்) சேர்ந்திருந்தார். அவர் கிரீட்டில் நேசதேசத் துருப்புகளின் தளகர்த்தராக இருந்தார். அவருடைய தலைமையின் கீழ், பிரிட்டிஷ் துருப்புகள், நியூஜிலந்து துருப்புகள் ஆஸ்திரேலியத் துருப்புகள், தைரியமாகப் போர் புரிந்து, ஜெர்மானியர்களுக்குத் தொந்தரவும், நஷ்டமும் செய்துகொண்டு வந்ததை பலர் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள். முக்கியமாக ஆஸ்திரேலியத் துருப்புகளின் திறமையைப்பற்றி, ஆஸ்திரேலிய முதல் மந்திரி, மிஸ்டர் மென்சிஸ், புகழ்ந்து கூறியிருக்கிறார். கிரீட்டிலிருந்து பின்வாங்கி வந்த துருப்புகள் ஹிட்லரின் கால அட்டவணையை மாற்றிவிட்டன வென்றும், எகிப்து, சூயஸ் என்ற உயிர் நிலைப் பிரதேசங்களின் பாதுகாப்பை இன்னும் அதிகமாகப் பலப்படுத்தியிருக்கின்றனவென்றும், மிஸ்டர் மென்சிஸ் கூறினார்.

கிரீட் யுத்தத்தைப்பற்றி ஆஸ்திரேலிய யுத்த மந்திரி, மிஸ்டர் ஸ்பெண்டர், பாராட்டிப் பேசினார். அமெரிக்காவின் உதவி வரும் வரைக்கும், நாகரீகத்தின் கணவாயைப் பாதுகாக்கும் பெருமையான கடமையைப் பிரிட்டிஷார் செய்துவருகிறார்கள், என்று அவர் சொன்னார்.

கிரேக்க மந்திரி, மிஸ்டர் சேகரிஸ், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் தைரியத்துடன் போர் செய்ததைக் குறித்துப் புகழ்ந்திருக்கிறார்.

"கிரீட்டுக்காக ஒரு குறிப்பிட்ட விலையைக் கொடுக்கத் தயாராயிருந்தோம். அந்த விலை, மதிப்புக்கு அதிகமாக உயர்ந்துபோனதும், கிரீட்டை விட்டு விலகத் தீர்மானித்தோம்" என்று ராணுவ வட்டாரங்கள், கிரீட் நிலைமையைப்பற்றி அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றன.

வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள துனீசியா மாகாணத்தில், பிரெஞ்சு துறைமுகப் பட்டணமாகிய ஸ்பாக்ஸைப் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின; ஒரு கப்பல் தீக்கிரையாய்விட்டது.

அபிசீனியாவில், வடக்கிலுள்ள துருப்புகள் தேசி, கோண்டார், அசாப் முதலிய இடங்களிலிருந்து, அடைக்கப்பட்ட பாதைகளைத் திருத்தியமைத்தன. தேப்ரீச் என்ற இடத்தை பிரிட்டிஷார் பிடித்துக் கொண்டார்கள். பிரிட்டிஷ் ஆபீசர்களுடைய தலைமையின் கீழ், அபிசீனியத் தேசாபிமானத் துருப்புகள் பாகோ என்ற இடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டன. இத்தாலியர்கள் கோண்டாரை நோக்கி பின்வாங்கிச் செல்லுகிறார்கள்.

எகிப்தில், சோலும் பிரதேசத்தைச் சுற்றி, 'ரோந்து' பார்க்கும் வேலை நடந்துவருகிறது.

லிபியாவில், தோப்ரூக்கிலிருந்து முன்னேறிச் சென்று பிரிட்டிஷ் துருப்புகள் எதிரிகளைத் தாக்கின.

ஆப்பிரிக்காவில் நடந்த எரிச் சண்டையில், 5,772 இத்தாலியர்களும், 12,010 ஆப்பிரிக்கர்களும் கைது செய்யப்பட்டார்கள். 14 டாங்கிகள், 7 யுத்த மோட்டார் வண்டிகள், 85 பீரங்கிகள், இன்னும் அநேக யுத்த சாமான்கள் கைப்பற்றப்பட்டன. அபிசீனியாவில் டிபாரக் என்ற இடம் பிரிட்டிஷாரால் மீண்டும் கைப்பற்றப்பட்டது. லிபியா நிலைமையில் யாதொரு மாறுதலுமில்லை. மத்தியதரைக் கடலில் எதிரிகளின் பெரிய "கான்வாய்" துணைக்கப்பல் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டு நாசப்படுத்தப்பட்டது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அட்லாண்டிக் கடலில் நடந்த பெருங்கடல் யுத்தத்தில், ஜெர்மனியின் பிரம்மாண்டமான யுத்தக் கப்பல், 'பிஸ்மார்க்'கை பிரிட்டிஷ் கப்பல்கள் தாக்கி முழுகடித்ததைப்பற்றி, 'செங்கடற்படை' என்ற ருஷ்யப்பத்திரிகை ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறது. இந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் கப்பல்களும், ஜெர்மன் கப்பல்களும், நேருக்கு நேராக யுத்தம் செய்தது இதுதான் முதல் தடவை என்றும், 'டார்பிடோ' வெடிகுண்டுகளின் உபயோகமும், ஆகாய விமானங்கள் கொண்டு செல்லும் கப்பல்களின் உபயோகமும், இந்த சண்டையில் நன்றாக விளங்குகின்றன என்று அந்த ருஷ்யப் பத்திரிகை கூறுகிறது. ருஷ்ய விஞ்ஞான சபையின் அங்கத்தினரான, ஈவனோவ் என்ற பிரபல வித்வான் 'பிஸ் மார்க்'கை முழுகடித்ததைப் பற்றி, 'துரூட்' என்ற பத்திரிகையில் எழுதியிருக்கிறார். "பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் இந்த சண்டையில் வேவுபார்க்கும் வேலையோடு எதிரியைத் தாக்கிய வேலையும் செய்தது ஒரு குறிப்பிடத்தக்க விஷயம்" என்று அவர் எழுதியிருக்கிறார்.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் பேச்சை வரவேற்று பலர் அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள்.

பிரிட்டனுக்கு அமெரிக்காவிலிருந்து வெண்ணெய் அனுப்புவதற்காக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அமெரிக்க விவசாய மந்திரி, மிஸ்டர் விக்கார்டு அறிவித்தார்.

அமெரிக்காவின் எஃகு நிலைமையைப்பற்றி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்டுக்கு ஒரு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் 14 லட்சம் டன் எஃகு குறைவாகத் தான் கிடைக்கும் என்று அதில் காணப்படுகிறது. ராணுவ சம்பந்தமில்லாதவர்கள் உபயோகப்படுத்தும் எஃகைக் குறைக்க வேண்டும், அல்லது எஃகு உற்பத்தி செய்வதை அதிகப்படுத்தவேண்டும் என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

அமெரிக்காவில் கட்டப்பட்ட 'அமெரிக்கன்' என்ற பெரிய கப்பல் அமெரிக்கக் கப்பற்படையில் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று, கப்பற் கமிட்டி அறிவிக்கிறது. இது 27,000 டன் எடையுள்ள கப்பல். மேற்கிந்திய தீவுகளுக்கருகில் போய்க் கொண்டிருந்த இந்தக் கப்பல் உடனே நியூபோர்ட் நியூஸ் என்ற துறை முகத்துக்குப்போகும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. ருமேனியாவின் மாஜி அரசர், காரோல் அவர்களும், அவருடைய காதலியாகிய மாடம் லூபெஸ்கு அவர்களும், அந்தக் கப்பலில் பிரயாணிகளாயிருக்கிறார்கள்.

அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு யுத்த சாமான்கள் கொண்டுபோன 'சப்ளை' கப்பல்களில், இதுவரை 23 கப்பல்கள் அட்லாண்டிக் கடலில் முழுகடிக்கப்பட்டன. ஆனால் அமெரிக்க சாமான்களைக் கொண்டு கனடாவிலிருந்து பிரிட்டனுக்குச் சென்ற கப்பல்களின் கணக்கு இதில் சேரவில்லை.

1934-ல், ஆஸ்டிரியாவில் ஜெர்மன் ஸ்தானீகராக இருந்த குர்ட் ஹென்ரீக் ரீத் என்ற ஜெர்மானியர் அமெரிக்காவில், ஒரு நியூயார்க் ஓட்டலில் கைது செய்யப்பட்டார்.

கனடாவில் இறக்குமதி வியாபாரம் அதிகரித்திருக்கிறது. 1941 முதல் நான்கு மாதங்களில் 40 கோடியே 20 லட்சம் டாலர் மதிப்புள்ள சாமான்கள் வந்திருக்கின்றன. அதே காலத்தில் போன வருஷம் 30 கோடியே 40 லட்சம் டாலர் சாமான்கள் வந்தன. 1941-ல் பிரிட்டனிலிருந்து 3 கோடியே 90 லட்சம் டாலர் சாமான்கள் வந்தன. 1940-ல் 4 கோடியே 10 லட்சம் டாலர் சாமான்கள் வந்தன. இதனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடல் வியாபார பலம் எப்படிப்பட்டதென்று தெரிகிறது.

அமெரிக்கா இன்னும் அதிக துரிதமாக யுத்த சாமான்கள் உற்பத்தி செய்யவேண்டுமென்று பிரிசிடெண்ட் ரூஸ்வெல்ட் விடுத்த அறிக்கை சம்பந்தமாக, கர்டிஸ் ரைட் கார்ப்பரேஷனைச் சேர்ந்த 38,000 தொழிலாளிகள், கோடைகால விடுமுறை தங்களுக்கு வேண்டியதில்லை என்று கூறிவிட்டார்கள்.

வாடகை—கடன் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட முதல் உணவு சாமான் கப்பல் பிரிட்டனுக்கு வந்து சேர்ந்துவிட்டது. அதில் 1,000 டன் மாவுர், 40 லட்சம் முட்டைகளும், 120,000 பவுன் எடை 'சீசு'ம் (பாலடைக் கட்டியும்) இருந்தன.

அடுத்த வருஷம், அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக, 300 கோடி பவுன் செலவிடப்படும் என்று தெரிகிறது. இது சென்ற ஜனவரியில் கொடுக்கப்பட்ட உத்தேசக் கணக்கிற்கு மேல் 90 கோடி அதிகமாக இருக்கிறது. வாடகை—கடன் சட்டத்தின் கீழ் ராணுவத்திற்காகவும், கடற்படைக்காகவும் செலவிடப்படும் மொத்தத் தொகை 800 கோடி பவுன் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க கப்பற் கமிட்டி, 28 வர்த்தகக் கப்பல்களை கப்பற்படைக்கு மாற்றியிருக்கிறது.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அமெரிக்க கப்பற்படைத்தலைவர், அட்மிரல் கிங்கோடு கலந்துபேசினார். பிரிட்டனிலிருந்து ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய நாடுகளுக்குப் போகும் பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பல்கள் வேலையை அமெரிக்க கப்பற் கமிட்டிதான் செய்வதாக ஏற்றுக்கொண்டது. இதனால், அந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் 12 பிரிட்டிஷ் கப்பல்கள் இப்போது யுத்தத்திற்கு உபயோகப்படும்.

அட்லாண்டிக் யுத்தத்தில், முழுகடிக்கப்பட்டு வந்த பிரிட்டிஷ் கப்பல்களின் எண்ணிக்கை இப்போது குறைந்திருக்கிறதென்றும், ஆனால் சரியாக எவ்வளவு அளவுக்கு குறைந்திருக்கிறது என்பதைப்பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை என்றும், அமெரிக்கக் கப்பற்படை மந்திரி, கர்னல் நாக்ஸ் கூறினார்.

### 4. கிரீசும், இத்தாலியும்.

பாசிஸ்டு ராணுவத்தின் தலைமைத் தளகர்த்தராக இருந்த லெப்டினண்டு-ஜெனரல் ஸ்டாரேசியை, முசலோனி வேலையைவிட்டு நீக்கிவிட்டார். அவர்

முன்பு பாசிஸ்டு கட்சியின் காரியதரிசியாய் இருந்தார். அவர் சில மாதங்களுக்குமுன், முசலோனியின் அதிருப்தியைப்பெற்று, போரின் முன்னரங்கத்துக்கு அனுப்பப்பட்டார். அவருக்குப் பதிலாக, இப்போது லெப்டினண்டு-ஜெனரல் என்சோகல்பியாடி என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இரண்டு இத்தாலியக் கப்பல்கள், பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகையை ஊடுருவிச் சென்று, அட்லாண்டிக் கடலைத்தாண்டிச் செல்ல முயற்சிக்கின்றன. அவைகள் "பட்டர்பிளை", "மாஜியோ" என்ற இரு சாமான் கப்பல்கள்; பருத்தி, ரப்பர், தோல் சாமான்களை இப்போது கொண்டு செல்கின்றன. பெர்னம்புகோவிலிருந்து (தென்னமெரிக்காவில், பிரேசிலிலுள்ள துறைமுகம்) ஒரு ஜெர்மன் துறைமுகத்துக்குப்போக எண்ணியிருக்கின்றன.

முசலோனியிடம் ஏழு வருஷமாக பிரதம அந்தரங்க காரியதரிசி உத்தியோகம் பார்த்து வந்த டாக்டர் ஓஸ் வால்டோ செபாஸ்டியானி, தன்னுடைய பதவியை, "சொந்தக் காரணங்களை முன்னிட்டு," ராஜிநாமா செய்துவிட்டார்.

## சென்னை விமானப்படைகளின் அதி உன்னதமான உதவி.

இந்தியாவினின்றும், விமானங்கள் வாங்குவதற்காக பிரிட்டிஷ் விமான உற்பத்தி மந்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட பெரும் நிதியை யனுசரித்து, பிரிட்டிஷ் விமானப்படையைச் சேர்ந்த ஆறு கிளைகளுக்கு விமானப்படை மந்திரி தற்போது இந்தியாவின் பல பாகங்களின் பெயர்களை வைத்துள்ளார். இந்தியாவினின்று அனுப்பிவைக்கப்பட்ட தொகையின் மொத்தம் 1,000,000 பவுன்களாகும். சென்னை மாகாணத்தில் சென்னை கவர்னர் அவர்களால் திரட்டப்பட்ட யுத்த உதவி நிதியின் மொத்தம் 675,000 பவுன்களாகும்; பஞ்சாப் மாகாணம் கொடுத்துதவியது 120,000 பவுன்களாகும்; ஐக்ய மாகாணமும் பம்பாய் மாகாணமும் முறையே 160,000 பவுன்களும் 100,000 பவுன்களும் கொடுத்துதவின. ஷ படைகளுக்கு இந்தமாதிரியாக பெயரிட்டிருப்பது இந்தியாவும் பிரிட்டனும் எப்போதும் நெருங்கியிருப்பதற்கு ஒரு அறிகுறியாகும். சாம்ராஜ்ய யுத்த முயற்சி சம்பந்தமாக இந்தியா செய்த பேருதவி என்னாளும் மறக்கப்படாமலிருப்பதற்காகவே மூன்று விமானப்படைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவைகளில் ஒன்று, 'ஹரிகேன்' போர்விமானப் படை. இப்படையானது சென்ற மகா யுத்தத்தில் மிகவும் நேர்த்தியாய் வேலைசெய்தது. இரண்டாவது 'ஸ்பிட்பையர்' போர்விமானப்படை. இவ்விரண்டு படைகளும் பிரிட்டனுக்காக பெரும்போர் புரிந்தன. 'டிபயன்ட்' என்னும் புது விமானப்படை மூன்றாவதாகும்.

'டன்கர்க்' சண்டையில் மிகவும் துணிச்சலுடன் போர்புரிந்து, விரோதியைச் சேர்ந்த 35 விமானங்களை ஒரேநாளில் சுட்டு வீழ்த்தின பெருமை 'ஸ்பிட்பையர்' விமானங்களையே சாரும்.

### 5. பால்கன்ஸ், துருக்கி, இராக், முதலியன.

ஞாயிற்றுக்கிழமை காலை (ஜூன்மீ 1-ந் தேதி) 8-மணிக்கு இராக்கில், சமாதான உடன்படிக்கை கையெழுத்திட்ட பிறகு, சண்டை நின்றுவிட்டது. இராக்கின் சிறு வயதுடைய அரசர் பெய்சால் பாக்தாத்துக்குச் சௌக்கியமாய் வந்து சேர்ந்தார். அவருக்குப் பதிலாக முன்பு ஆண்டிருந்த எமீர் அப்துல் இல்லாவும் பாக்தாத்தில் இருக்கிறார். சமாதான உடன்படிக்கையின்படி, இராக்கியத் துருப்புகள் சமாதான காலத்தில் தாங்கள் இருக்க வேண்டிய இடங்களுக்குச் சென்றுவிடவேண்டும்; பிரிட்டிஷ் கைதிகள் உடனே விடுதலை செய்யப்படவேண்டும்; அச்சுக் கைதிகளை இராக்கில் காவலுடன் வைத்திருக்கவேண்டும்.

துருக்கி, சிரியாவில் பிரிட்டன் விரைவாக ராணுவ நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று விரும்புவதாகத் தெரிகிறது. சிரியாவில் ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்ட விமானத்தளங்களை பிரிட்டிஷார் சீக்கிரம் தாக்கிக் கைப்பற்றினால் நல்லதென்று துருக்கி ராணுவ வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

சிரியாவில் நாஜித் துருப்புகள் வந்து இறங்கிவிட்டன. லேசான 'டாங்கி'களை அவைகள் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது.

சிரியாவின் ஹை கமிஷனர், ஜெனரல் டெண்ட்ஸ், கிழக்கு சிரியா முற்றுகையிடப்பட்ட பிரதேசமாய் விட்டது என்று அறிவித்துவிட்டார். சிரியாவின் ஆகாய விமானத்தளங்கள் பிரிட்டிஷாரால் தாக்கப்பட்டன.

நாஜித்துருப்புகள் சிரியாவுக்குள் வரவேயில்லை என்று ஜெனரல் டெண்ட்ஸ் கூறுகிறார். சிரியாவுக்குள் அயல் நாட்டுத்துருப்புகள் எது வந்தாலும், ஜெர்மானியத் துருப்புகள் கூடவந்தாலும், பிரெஞ்சுத் துருப்புகள் அவைகளை எதிர்த்துப் போராடும் என்று சிரியாவில் கூறப்படுகிறது.

சிரியாவிலிருந்து வந்த பிரயாணிகள், அங்குள்ள பிரெஞ்சுத்துருப்புகளில் ஜெனரல் டிகாலுக்கு ஆதரவாக ஒரு பெரும் பகுதி இருக்கிறதென்று கூறுகிறார்கள்.

சிரியாவில் அநேக ஜெர்மானியர்கள் பிரயாணிகள் போல் வந்து கொண்டேயிருக்கிறார்களென்றும், ஜெர்மானியர்களுடைய அனுமதியின் மேல், பதிதாக யுத்தத்திற்தத தயாரான பிரெஞ்சு ஆகாய விமானப் படை ரகசியமாக சிரியாவுக்கும் துனிசியாவுக்கும் போய்ச் சேர்ந்திருக்கிறதென்றும், ஒருக்கால் பிரிட்டிஷார் சிரியாவைத் தாக்கினால், அதைத் தடுப்பதற்காக விஷி அரசாங்கம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறதென்றும், இராக், சிரியாவின் தெற்கு, கிழக்கு எல்லையோரங்கள், பாலஸ்தீனம், முதலிய இடங்களில் பிரிட்டிஷ் துருப்புகள் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டு வருகின்றனவென்றும், சிரியா விஷயமாக பிரிட்டன் செய்யும் காரியங்களுக்கு அமெரிக்கா ஆதரவளிக்குமென்றும், கடைசியாக வெளியான செய்திகள் கூறுகின்றன.


### 6. கப்பல் நிலைமை.

"காண்டி ரோசோ" என்ற இத்தாலியக் கப்பலை பிரிட்டிஷ் சப்மரீன் தாக்கி முழுகடித்ததைப்பற்றி இத்தாலிய அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தக் கப்பல் 18,000 டன் எடையுள்ள கப்பல். சிரகியூசுக்குத் தெற்கில் ஒரு சாமான் கப்பலுக்குத் துணையாய்ப் போய்க்கொண்டிருக்கும் போது, முழுகடிக்கப்பட்டது.

திமிங்கிலத் தொழிற்சாலைக் கப்பல்கள் மூன்று ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்டன. அவைகள் நார்வேய்க்குச் சொந்தமான கப்பல்கள். 150,000 பீப்பாய் திமிங்கில எண்ணெய் அந்தக் கப்பல்களில் இருந்தன, கைப்பற்றப்பட்ட கப்பல்களின் பெயர் ஓசா, ஓலிவேஜர், சோல்கிளிமிட் என்பதாகும். மூன்றில் இரண்டு கப்பல்கள் அண்டார்டிக் கடலில் பிடிக்கப்பட்டன. அவைகளில் வேலை செய்திருந்தவர்கள் 14 வாரம் ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள ஒரு நாட்டில் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்கள்; பிறகு நார்வேய்க்கு அனுப்பப்பட்டார்கள்.

13 அமெரிக்கக்கப்பல்கள், அமெரிக்க ராணுவத் துணைக் கப்பல்களாக மாற்றப்பட்டன. "பிரசிடெண்ட் ஜாக்சன்" "பிரசிடெண்ட் ஆடம்ஸ்" "பிரசிடெண்ட்

# இந்தியாவின் கேந்திர ஸ்தானம்




Reg. No. 57/2 Copies 9700

Heliozinco., Survey Office Madras, 1941.

டாப்டு'', ''பிரசிடெண்ட் பியர்ஸ்'' என்ற கப்பல்கள் இவைகளில் சேர்ந்திருக்கின்றன. இந்தக் கப்பல்கள் 10,000-த்திலிருந்து 14,000 டன் வரைக்கும் எடையுள்ளதாயிருக்கின்றன.

ஜூன்மீ 2-ந் தேதியோடு முடிவான ஒரு வாரத்தில், எதிரிகளின் கப்பல்களில் பல முழுகடிக்கப்பட்டன; அநேகம் சேதமாக்கப்பட்டன. அவைகளின் மொத்த எடை 63,000 டன் என்று தெரிகிறது. இதில் 55,000 டன் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் முழுகடிக்கப்பட்டிருக்கின்றன.

அச்சுநாடுகளின் கப்பல் நிலைமை இப்போது மிகவும் நெருக்கடியாய் இருக்கிறது. பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானப்படை, வடக்குக்கடலிலும், மத்தியதரைக்கடலிலும் இங்கிலீஷ் கால்வாயிலும், அநேக எதிரிக்கப்பல்களைத் தாக்கி முழுகடித்திருக்கிறது. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து, மேமீ 13-ந் தேதி வரைக்கும் சுமார் 30 லட்சம் டன் எடையுள்ள அச்சுக்கப்பல்கள் முழுகடிக்கப்பட்டு அல்லது கைப்பற்றப்பட்டு இருக்கின்றன.

## 7. தூரக்கிழக்கு அரங்கம்.

ஜப்பானைப் பொறுத்தவரையில் அமெரிக்காவின் நோக்கத்தில் யாதொரு மாறுதலும் இல்லை என்று அமெரிக்க மந்திரி, மிஸ்டர் கார்டெல் ஹல், பத்திரிகை நிருபர்களுக்குப் பதிலளித்தார்.

ஜப்பானிய யுத்த மந்திரி, ஜெனரல் டோஜோ, ஜப்பானிய தளகர்த்தர்கள் எல்லோரையும் கூட்டி, ''ஜப்பானின் நெருக்கடியான நிலைமை''யைப்பற்றி பேசினார். இந்த நெருக்கடியான நிலைமையைத் தாண்டிச் செல்வதற்காக, வயதானபடியால் ராணுவத்திலிருந்து விலகிய 15 ஜெனரல்களை அழைத்து, அவர்களுடைய ஒத்துழைப்பையும், உதவியையும் விரும்பினார். பிறகு ஐரோப்பாவிலும், சீனாவிலும் இருக்கும் யுத்த நிலைமையைப்பற்றி அவர்களுக்கு விவரித்துக் கூறினார்.

அச்சு ஒப்பந்தத்தில், ஜப்பானுக்கு நம்பிக்கை குறைந்து கொண்டுவருவதாக, அமெரிக்க அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜப்பானின் பல பாகங்களில், ஜெர்மானிய ''பிரயாணி''கள் வந்துகொண்டே இருக்கிறார்களென்றும், அவர்கள் ஜெர்மனியின் ஐந்தாம் படையான வேவுகாரர்களென்றும், இதைப்பற்றி ஜப்பானியப் பொது மக்கள் அதிருப்தி கொண்டிருக்கிறார்களென்றும், 'டெய்லி மெயில்' பத்திரிகை நிருபர் எழுதுகிறார்.

வெளிநாட்டு நாணய மாற்று சம்பந்தமாக ஜப்பானிய அரசாங்கம், பாங்கிகளுக்கு நஷ்ட ஈடு உத்தரவாதம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஜப்பானிய 'யென்' நாணயம், பிரிட்டிஷ் பவுன் நாணயத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

சீனாவில், மத்திய ஷான்சி, வடக்கு ஹோனான், பிரதேசங்களில், ஜப்பானியத் துருப்புகளுக்கும், சீனத் துருப்புகளுக்கும், கடுமையான போர் நடந்து வருகிறது. இதில் ஜப்பானியத்துருப்புகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஷான்சியிலிருந்து வந்த ஒரு சீனச் செய்தி, 2,000 ஜப்பானியத் துருப்புகளை சிதறடித்து, 800 பேரைக் கொன்றுவிட்டதாகக் கூறுகிறது. ஜாங்டீஸ் பிரதேசத்தில், 1,000 ஜப்பானியத் துருப்புகளைக் கொன்றும் காயப்படுத்தியும் சீனத்துருப்புகள் வெற்றியடைந்ததாகவும் தெரிகிறது.

சுங்கியாங் என்ற பட்டணத்தின் மேல் ஜப்பானிய விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டதனால், 67 பேர் கொல்லப்பட்டார்கள், பலர் காயமடைந்தார்கள். ஆற்றோரத்தில் படகுகளில் இருந்தவர்கள் மேலும் வெடி குண்டுகள் விழுந்தன; படகுகள் சுக்குச் சுக்கலாய் உடைந்து போய் விட்டன; இறந்து போனவர்களும், காயப்பட்டவர்களும் சுமார் 100 பேர்.

## 8. விஷி.

பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில், மக்கள் அமைதியின்றி இருக்கிறார்கள். இந்த விஷயத்தை விஷி அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டு உதவி மந்திரி, அட்மிரல் பிளேதான், உண்மைதான் என்று பாரிஸ் 'ரேடியோ'வில் கூறியிருக்கிறார். அமைதியின்மைக்குக் காரணம், மக்களின் குறுகிய புத்தியும், 'எதிரிகளின்' பிரசாரமும், என்று அவர் சொன்னார்.

துனிசியாவின் துறைமுகத்தைத் தாக்கியதை ஆட்சேபித்து, விஷி அரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறது.

ஆப்பிரிக்காவில், ஜெனரல் டிகாலின் சுவாதீனத்தின் கீழிருக்கும் சுதந்தர பிரெஞ்சு பிரதேசங்களைக் கைப்பற்ற, அட்மிரல் தார்லன் ஹிட்லரோடு சதியாலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது.

விஷி அரசாங்கம், பிரெஞ்சுகப்பற்படைத் தளங்களை ஜெர்மனியின் உபயோகத்திற்காக விடுவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. ஹிட்லரும், அட்மிரல்தார்லனும் பேசி முடிவு செய்த ஒப்பந்தத்தில், ஆறு கப்பல் தளங்களை, பிரெஞ்சுக் கப்பல்களும், ஜெர்மன் கப்பல்களும் கூட்டுறவாக உபயோகப்படுத்துவது ஒரு முக்கியமான நிபந்தனை என்று சொல்லப்படுகிறது. பிரான்சின் மத்தியதரைக் கரையோரத்தில் உள்ள சீடி, சிரியாவிலுள்ள பீரட், நைஸ் பிரதேசத்தில் உள்ள வில்பிரான்ஷ், வடக்கு ஆப்பிரிக்காவில் ஆல்ஜியர்ஸ், காச பிளாங்கா, மேற்கு ஆப்பிரிக்காவில் டாக்கர்—இந்த ஆறு பிரெஞ்சுத் தளங்கள் இம்மாதிரி பயோகப்படுத்தப்படும் என்று தெரிகிறது.

## 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

பிரான்சு தேசத்தில், ஆட்டுக்கறியைப் பகிர்ந்து கொடுக்கும் பங்கு விகிதம் ஜூன் மாதத்திலிருந்து, ஒரு மாதத்திற்கு 250 கிராம் எடைதான் என்று பாரிஸ் ரேடியோ மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த எடை அரை பவுண்டுக்குச் சற்று அதிகமானது; பிரிட்டனில் ஒரு ஷில்லிங்குக்குக் கொடுக்கும் எடை இதுதான்.

அயல்நாட்டு ரேடியோ சமாச்சாரங்களைக்கேட்டு மற்றவர்களுக்குச் சொன்னதற்காக, ஜோகன் வொய்ல்டு என்பவன் நூரம்பர்கில், ஜெர்மானியர்களால் தண்டிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டான்.

நார்வேயில், ஜெர்மன் கப்பற் படையின் பிரதம தளகர்த்தரான அட்மிரல் போயிஹாம், ஓஸ்லோவில் ''கிராண்டு ஓட்டலில்'' தற்கொலை செய்து கொண்டார். அவர் ஹெஸ்ஸுக்கு நண்பர். ஹிம்லர் நார்வேய்க்குப்போன பிறகு, இந்த தற்கொலை நடந்தது.

ருமேனியா கூடிய சீக்கிரம், ஜெர்மனியைப்போல் சர்வாதிகார நாடாக மாறப்போகிறதென்றும், ருமேனிய பார்லிமெண்டு சபை அழிக்கப்படுமென்றும், இப்போது ஹிட்லரின் கையாளாக இருக்கும் ஜெனரல் ஆண்டநெஸ்கோ மந்திரிகளை எல்லாம் அனுப்பிவிட்டு, யந்திரவேலை நிபுணர்களையும், அரசியல் அனுபோகஸ்தர்களையும் வைத்துக்கொண்டு தானே சகல அதிகாரமும் கொண்டு அரசாங்கத்தை நடத்துவாரென்றும், ஒரு ருமேனியச் செய்தி கூறுகிறது.

பழைய பிரான்சின் தலைநகரான பாரிசில், இராக்காலத்தில் ஜெர்மானியர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள். இது மிகவும் அதிகப்பட்டு வருவதால், இதற்காக ஒரு தனி விசாரணைக் கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், ஜெர்மானியர்களைத் தாக்குபவர்களுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்படுமென்றும் ஜெர்மன் ஆதிக்கத்திலிருக்கும் பாரிஸ் ரேடியோ அறிவிக்கிறது.

## 10. நடு நிலைமை நாடுகள்.

ருஷ்யாவின் நடுநிலைமையைப்பற்றி, மிஸ்டர் பர்னார்டு ஷா 'நியூஸ்டேட்ஸ்மன்' என்ற பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், ஸ்டாலின் ஜெர்மனிக்கு பயப்படவில்லையென்றும், யுத்தத்தில் ஈடுபட விரும்பாத காரணம் யுத்தத்தினால் மக்களுக்குக் கஷ்டம் நேருவதுதானென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், மிஸ்டர் பர்னார்டு ஷா கூறுவதாவது :— ஸ்டாலின் ஜெர்மனிக்குப் பயப்படவில்லை. ஒவ்வொரு யுத்த நெருக்கடியான சமயத்திலும், ஹிட்லரும், ஜெர்மன் பட்டாளங்களும் இல்லாமலே இருந்தால் எந்தவிதமாக நடந்துகொள்வாரோ, அந்தவிதமாக ஸ்டாலின் நடந்துகொண்டிருக்கிறார். ஹிட்லருடைய அனுமதியைப் பெற்று ஸ்டாலின் எந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்? வெள்ளை ருஷ்யாவை மீண்டும் கைப்பற்றியது, ருஷ்யாவுக்கும், பின்லாந்துக்கும் மத்தியில் இருக்கும் எல்லையை மாற்றியது, பால்டிக் மாகாணங்களில் ருஷ்ய பலத்தை அதிகரிக்கும்படி செய்தது—இவைகளெல்லாம் ஹிட்லரைக் கேட்காமல் ஸ்டாலின் செய்திருக்கிறார். ஸ்டாலின் பயப்படுவது

யுத்தத்தில் தோல்வியல்ல; யுத்தமே வேண்டாமென்பதுதான். ஆனால் யுத்தத்தில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டால், ருஷ்யாவின் எதிரிகளுக்காக நான் பரிதபிக்கிறேன் என்று மிஸ்டர் டர்னார்டுஷா கூறியது தற்போதுள்ள ருஷ்ய மனப்பான்மையைக் காட்டுவதுபோலிருக்கிறது.

பல யூக்ரேனிய சிறு மாகாணங்களில், ஆயிரக் கணக்கான திறமைவாய்ந்த ருஷ்யத் துருப்புகள், விமானக் குடையாளர் எதிர்ப்பு சம்பந்தமாகவும், விமான எதிர்ப்பு சம்பந்தமாகவும், யுத்தப் பயிற்சி செய்தன. இன்னும் அநேக ஆயிரக் கணக்கான துருப்புகள், விமான எதிர்ப்பும் கடற்படை எதிர்ப்பும் ஒரே காலத்தில் நேர்ந்தால் அவைகளைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பது சம்பந்தமாக பயிற்சிகளைச் செய்தார்கள். இதற்குமுன், மாஸ்கோ மாகாணத்தில், இதுபோன்ற தாக்குதலைத் தடுக்கும் பயிற்சி முறைகள், ருஷ்யத் துருப்புகளால் பழகப்பட்டன. காரகோவ் மாகாணத்தில் கூடிய சீக்கிரம் இந்தப் பயிற்சிகள் நடைபெறுமென்று தெரிகிறது.



பிரிட்டனில் ஒரு இடத்திலே செய்யப்படும் 'ஹரிகேன்' போர் விமானங்கள்.

---

# துருக்கியின் நிலைமை; ஜெர்மனியின் நோக்கம்.

## பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் துருப்புகள்.

### சிரியாவில் ஜெர்மன் முயற்சி.

கிழக்கு மத்தியதரைக் கடலில் நடந்த சம்பவங்களையும், இப்போது இருக்கும் நிலைமையையும் நோக்கினால், துருக்கி தேசத்தைச் சுற்றி ஜெர்மனி தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நாட்டியிருக்கிறது என்ற விஷயம் நன்றாகப் புலப்படுகிறது. துருக்கியின் ஐரோப்பிய எல்லையோரத்தில், ஜெர்மனி தன்னுடைய துருப்புகளைச் சேர்த்து வைததிருக்கிறது; டார்டனல்ஸ்ஸிலிருந்து, ரோட்ஸ் வரைக்கும் உள்ள கிரேக்கத் தீவுகளில் ஜெர்மன துருப்புகளும், இத்தாலியத் துருப்புகளும் இருக்கின்றன; துருக்கியின் வடபாகத்தைத் தாக்க, பல்கேரிய கப்பல்களும், ருமேனிய கப்பல்களும் ஜெர்மனிக்கு உதவியாக இருக்கின்றன. சிரியா கூட ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டால், துருக்கியைச் சுற்றி ஒரு வளையம் போட்டது போல ஜெர்மனியின் யுத்த பலம் அமைந்து நிற்கும். கருப்புக் கடலில் கான்ஸ்டான்சா என்ற துறைமுகத்தில் கப்பற்படைப் பயிற்சியும், விமானப் பயிற்சியும் ஒன்று சேர்ந்து ஜெர்மனி சமீபத்தில் நடத்தியது. அதைக் கவனித்தால், துருக்கியின் வடக்குக் கரையோரம் தாக்கப்படலாம் என்று தோன்றுகிறது. இதல்லாமல், ஜெர்மனியும், ருஷ்யாவும் பெரிய யுத்த முயற்சியில் ஒன்று சேர்ந்து போராடப்போகின்றன என்ற ஒரு வதந்தியை ஜெர்மனி கிளப்பிவிட்டிருக்கிறது. மூன்று பக்கங்களில் ஜெர்மனியும், நானகாவது பக்கம் ருஷ்யாவும், துருக்கிக்கு எதிராக இருக்கின்றன என்ற பயத்தை துருக்கிக்கு உண்டாக்க ஜெர்மனி முயற்சி செய்கிறது. ஆனால், இராக்கிலும், சிரியாவிலும் பிரிட்டன்தான் வெற்றியடையும் என்று துருக்கி நம்புகிறது; ஆனால் ருஷ்யா தலையிடுவதானால் துருக்கி பயப்படுமென்று தெரிகிறது. ருஷ்யாவுக்குப் பாரசீக வளைகுடாவைக் கொடுத்துவிட்டால், பாதோம் வழியாக ஜெர்மன் துருப்புகள் இராக்குக்குப் போவதற்கு ருஷ்யா இடங்கொடுக்கும். உண்மை எப்படி இருந்தாலும், இம்மாதிரியான வதந்திகளை ஜெர்மனி பரவும்படி செய்து, துருக்கியின் மனோ தைரியத்தைக் குலைக்க எண்ணுகிறது.

துருக்கியின் மனோ தைரியம் உண்மையில் குறைய ஆரம்பித்திருக்கிறது என்பதற்குச் சில ஆதாரங்கள் இருக்கின்றன. பண்ட மாற்றுதல் சம்பந்தமாக துருக்கியும் ஜெர்மனியும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன்படி, 16 அச்சு வர்த்தகக் கப்பல்கள் பாஸ்பரஸ் வழியாக மேற்கே சென்றன; அவைகளில் சந்தேகப்படும்படியான சாமான்கள் கொண்டுபோகப்பட்டன. துருக்கியால் அதைத் தடுக்கமுடியவில்லை. பிரெஞ்சு சிரியாவிலிருந்து இராக்குப் புரட்சிக்காரர்களுக்கு, அலெப்போ—மோசூல் ரயில்வே மூலமாக யுத்த சாமான்கள் ஜெர்மனியால் அனுப்பப்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்த விஷயத்தை துருக்கியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். தன்னுடைய நேசதேசத்தார்களிடமிருந்து யுத்த சாமான்களும், இதர உதவியும் வேண்டிய அளவுக்குப் பெறுவதற்குள், ஜெர்மனியுடன் சண்டை வைத்துக்கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் துருக்கி இருப்பதாகத் தெரிகிறது.

### சிரியாவில் இரண்டு அனுகூலங்கள்.

சிரியாவைப்பற்றிய விஷயத்தில் துருக்கிக்கு அதிக கவலை உண்டு. அச்சுத் துருப்புகள் அதிகமாக சிரியாவுக்கு வந்து சேருவதற்கு முன், பிரிட்டன் சிரியாவைக் கைப்பற்றிக்கொண்டால் மிகவும் நல்லது என்று துருக்கியில் அபிப்பிராயம் பலமாக இருக்கிறது. பாலஸ்தீனத்தில் இருக்கும் பிரிட்டிஷ் துருப்புகள் சிரியாவைப் பிடிப்பதற்குப் போதும் என்று சொல்லப்படுகிறது. இராக்கில் இருக்கும் நிலைமை பிரிட்டனுக்கு அனுகூலமாக மாறியிருப்பதனால், சிரியா அச்சு நாட்டுக் கைகளில் சிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்; அப்படிச் செய்தால் இரண்டு அனுகூலங்கள் உண்டு. துருக்கியைத் தப்புவிக்கலாம்; சைப்ரஸ் தீவு, சூயஸ் கால்வாய், இவைகளின் பாதுகாப்புகளைப் பலப்படுத்தலாம்—என்று சிலர் சொல்லுகிறார்கள்.

துருக்கியில் வேறொரு அபிப்பிராயமும் இருக்கிறது. பிரெஞ்சு அரசாங்கத்தின் உண்மையான எண்ணம் என்ன என்பதை யறிந்துகொள்ளவேண்டும். சிரியா பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இனிமேல் இருக்கப்போவதில்லை என்று தெரிந்தால், உடனே துருக்கி சிரியாவின் மேல் உடனே படையெடுத்து, அதைக் கைப்பற்றி, துருக்கிக்குச் சம்பந்தப்பட்ட ஒரு தனிக் குடியரசாக ஏற்படுத்தவேண்டும், என்று சிலர் நினைக்கிறார்கள்.

ஆனால், இந்த அபிப்பிராயங்கள் எல்லாம் விரும்பும் விஷயங்களை நடக்கக்கூடிய விஷயங்களாகக் கருதுகின்றன. துருக்கியைப் பொறுத்தவரையில், சில உண்மைகளை நாம் உணரவேண்டும். துருக்கி ஜெர்மானியர்களால் சூழப்பட்டிருக்கிறது. இதைத் துருக்கி விரும்பவில்லை; தன்னுடைய சுதந்தரம் நேர்முகமாகத் தாக்கப்படுமானால், எதிரிகளைப் போராடி விரட்டியடிக்கத் துருக்கி எல்லா முயற்சியும் செய்யும். ஆனால், சிரியா மூலமாகத் தன்னை ஜெர்மனி தாக்கக்கூடாது என்று துருக்கி ஆசைப்படுகிறது. சிரியாவைத் தரை வழியாகச் சென்று கைப்பற்றுவது ஜெர்மனியால் முடியாத காரியம்; டோடெகனீஸ் தீவுகளிலிருந்து கடல் வழியாக 380 மைல் வருவதும் சுலபமான காரியமில்லை; ஆனால் கிரீட்டில் நடந்தபடி, ஆகாய விமானங்கள் மூலமாக ஜெர்மன் துருப்புகள் நேசபான்மையுடன் இருக்கும் சிரியாவுக்குச் செல்லலாம். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், பாலஸ்தீனத்திலிருக்கும் பிரிட்டிஷ் துருப்புகள் அதிவிரைவாக சிரியாவைக் கைப்பற்ற முயற்சி செய்யும். சிரியாவை நாஜிகள் கைப்பற்றுவதைச் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாதென்று துருக்கியும் கூறியிருக்கிறது.

---

# இந்தியப் பாதுகாப்பு அரண்கள்.

## இயற்கைப் பாதுகாப்புகளும், செயற்கைப் பாதுகாப்புகளும்.

### அச்சு பயமுறுத்தல்களை உறுதியுடன் தடுக்கவேண்டும்.

இராக்கில் பிரிட்டிஷாருக்கு எதிரிடையாகச்செய்யப்பட்ட புரட்சி முறிந்து விழுந்துவிட்டது; சட்ட பூர்வமான அரசாங்கத்தைக் கவிழ்த்து, துராக்கிருதமாக அரசாட்சி நடத்திய ரஷீத் அலி இராக்கைவிட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார். இந்தச்செய்தி இந்தியாவில் எல்லோராலும் வரவேற்கப்படும். ரஷீத் அலியின் புரட்சிக்காக, அச்சு வல்லரசுகள் பணவுதவி செய்திருக்கின்றன என்பதற்கு அநேக அத்தாட்சிகள் கிடைத்திருக்கின்றன. அவருடைய புரட்சிவெற்றிகரமாக முடிந்திருந்தால் இராக், ருமேனியாவைப் போல் ஜெர்மனியின் அடிமைநாடாயிருக்கும்.

ஜெர்மனி ஆசியாவின்மேல் படையெடுப்பதற்காக, ரஷீத் அலி இராக்கின் கதவைத்திறந்துவிட்டார். விஷி அரசாங்கமும் ஜெர்மனிக்கு உதவியளித்தது. இராக்கிலுள்ள துரோகிகள் கதவைத்திறந்தார்கள்; பிரெஞ்சு துரோகிகள் வழியைச்செப்பனிட்டு ஒழுங்கு செய்தார்கள் என்று கூறப்படுவது உண்மையான நிலைமையை நன்றாக விளக்கிக்காட்டுகிறது. விஷி அரசாங்கத்தின் அனுமதியின்பேரில், சிரியாவில் உள்ள முக்கியமான ஆகாய விமான தளங்கள் ஜெர்மனியின் கையில் சிக்கின; அங்கிருந்துதான் ரஷீத் அலிக்கு உதவியனுப்பப்பட்டது; பிரெஞ்சு யுத்த சாமான்களும், இதர பொருள்களும்கூட சிரியாவிலிருந்துதான் இராக்குக்குப் போயிற்று.

யுத்த அரங்கம் கிழக்குநோக்கி வந்தது, ஒரு முக்கியமான பயனை அளித்திருக்கிறது: யுத்த நெருக்கடியான விஷயங்களை இந்தியா நன்றாக உணரும்படியான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. யுத்த தந்திர ஏற்பாடுகள் எப்படி செய்யப்படுகின்றன என்பதும், இந்தியாவின் எல்லைக்கு வெளியில் எப்படிப்பட்ட பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதும் இப்போது விளக்கமாகப் புலப்படுகின்றது. இந்தியாவின் வெளிப்பாதுகாப்புகளை ஊடுருவிச் செல்ல ஜெர்மனி முயற்சிசெய்தது; அந்த முயற்சியினால், வெளிப்பாதுகாப்புகளின தன்மை, அமைப்பு, பலம் முதலியவைகளை நாம் அறிந்துகொள்ளும்படியான ஒரு தருணம் உண்டாயிருக்கிறது.

கிழக்கு கோளத்தில், இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் எம்மாதிரியான அமைப்பில் இருக்கிறது என்ற விஷயம், இந்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பூகோளப்படத்தைப் பார்த்தால் தெரியும். இந்தியாவிற்கு பிரம்மாண்டமான இயற்கைப்பாதுகாப்பு இருக்கிறது; இமாலயமலை, இந்தியாவின் வடகிழக்கிலிருந்து யாராவது படையெடுத்து உருவதைத் தடுக்கும் பெருஞ்சுவர்போல் விளங்குகிறது. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும், பலூசிஸ்தானத்திலும், பயிற்சிபெற்றுக் கைதேர்ந்த துருப்புகள் காவலிருக்கின்றன; கைபர்கணவாய் வழியாகவாவது, அல்லது மேற்கில் வேறெந்த இடத்திலிருந்தாவது எதிரிகள் தாக்க முயற்சித்தால், அந்த முயற்சியை எல்லைப்புறத்துருப்புகள் பாழ்படுத்திவிடும். இந்திய தீபகற்பத்தின நீண்ட கடற்கரையோரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் கடற்படைக்கும், "ராயல் இந்தியன் நேவி" என்ற இந்திய கடற்படைக்கும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தற்கால யுத்த முறைகளும், ஆயுதங்களும், நிலைமையை அடியோடு மாற்றிவிட்டன. தரைப்படைகள், முதலிய பாதுகாப்புகளை ஆகாய விமானங்கள் ஒரு பெரிய அளவுக்கு பிரயோசனமில்லாமல் செய்துவிட்டன. அதாவது, இந்தியாவின் பாதுகாப்பு இந்தியாவின் எல்லைக்குள் மாத்திரம் இருந்தால் போதாது; இந்தியாவின் எல்லைக்கு வெளியில் வெகுதூரத்தில் இருக்கவேண்டும்—என்ற உண்மையைப் புதிய யுத்த முறைகள் காண்பித்துவிட்டன. இந்தியாவினுடைய எல்லைகள் இப்போது சிங்கப்பூரிலும், எகிப்திலும், சூயஸ் கால்வாயிலும் இருக்கின்றன.

### மேற்கிலிருந்து தாக்கவேண்டுமானால்—

மேற்கிலிருந்து இந்தியாவை அச்சுநாடுகள் தாக்கவேண்டுமென்றால், எகிப்தின் மார்க்கமாகத்தான் தாக்கவேண்டும். எகிப்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் ஏராளமாக இருக்கின்றன; லிபியாவிலிருந்து எதிரிகள் முன்னேற முயற்சித்தால் பிரிட்டிஷ் துருப்புகள் அவர்களைத் தடுத்துவிடும். முதலில் ஜெர்மனி போட்ட திட்டம் வேறு. பிரிட்டனை ஜெர்மனி தாக்குவதென்றும், அதே சமயத்தில் இத்தாலி சூயஸ்கால்வாயைத் தாக்குவதென்றும் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை ஜெர்மனியின் தாக்குதலைத் தடுத்து, எதிர்த்துப் போராடியது; இத்தாலியத் துருப்புகளின் முன்னேற்றத்தை, ஜெனரல் வேவல் பல திறமையான வெற்றிகளால் தடுத்து, இத்தாலியர்களை பெங்காசிக்குத் துரத்திவிட்டார்; பிறகு இத்தாலியின் கிழக்காப்பிரிக்கா கைப்பற்றப்பட்டது. பின்பு ஜெர்மானியர்கள் லிபியாவில் தலையிட்டார்கள். இப்போது, லிபியா—எகிப்து எல்லையோரத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளும், ஜெர்மன் துருப்புகளும் நேருக்கு நேராக சந்தித்துக்கொண்டிருக்கின்றன. லிபியாவிலுள்ள ஜெர்மன் துருப்புகளுக்குப் பின்புறத்தில் உள்ள தோப்ருக் துறைமுகம் பிரிட்டிஷார் கையில் இருக்கிறது. பிரிட்டிஷ்

துருப்புகளாலும், இந்தியத் துருப்புகளாலும் பாதுகாக்கப்படும் தோப்ருக், ஜெர்மன் படைக்கு, ஒரு பக்கத்தில், பெரிய ஆபத்தாக இருந்துகொண்டே வருகிறது. பொதுவாக மத்திய கிழக்கரங்கத்திலும், சிறப்பாக தோப்ருக்கிலும், பிரிட்டிஷார் தங்களுடைய உரிமைகளை எப்படியாவது கட்டாயம் காப்பாற்றுவார்கள் என்று பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில் கூறியிருக்கிறார். எகிப்திலிருக்கும் நம்முடைய துருப்புகள் இந்தியாவைப் பாதுகாக்கும் என்பதையறிந்து பொதுமக்களின் நம்பிக்கை அதிகப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தியாவின் பாதுகாப்பு எகிப்தில் மாத்திரம் இல்லை. இப்போது நடக்கும் யுத்தத்தில், ஆகாய விமானங்களும், வேகமாகச் செல்லும் யுத்த வண்டிகளும், தூரம், கடல், வனாந்தரம், முதலிய பூகோளத் தடைகளை நீக்கிவிட்டன. எகிப்து நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆனால் பால்கன்ஸ் பிரதேசத்தின் வழியாக இந்தியாவுக்கு வருவதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. ஜெர்மனி ஈஜியன் கடற்கரையில் வந்திருக்கிறது; ருஷ்யா நடுநிலைமை வகிக்கிறது; இந்த நிலைமையில் அந்த வழிகளுக்கு ஒரு முக்கியம் ஏற்பட்டிருக்கிறது. அவ்வழிகள் எவை என்பதுபற்றி இப்போது கூறுவோம் :—

(1) பால்கன்ஸ்—துருக்கி—இரான்—ஆப்கனிஸ்தானம் அல்லது பலூசிஸ்தானம்.

(2) பால்கன்ஸ்—சிரியா — இராக்—இரான்—ஆப்கனிஸ்தானம் அல்லது பலூசிஸ்தானம்.

இந்த இரண்டு வழிகளில் இப்போது முதல் வழி பிரயோசனமானதல்ல. துருக்கிக்குத் தெற்கிலிருந்து பிரிட்டிஷ் ஆதரவு வருவதற்கு சௌகரியங்கள் இருக்கின்றன. துருக்கி மூலமாகப் போவதென்றால் அதற்கு துருக்கியைத் தாக்கி, கைப்பற்றவேண்டும்; துருக்கியைத் தாக்கினால், அதை எதிர்ப்பதற்குத் துருக்கிக்குப் பலமிருக்கிறது. ஆனால், இரண்டாவது வழி சற்று அபாயம் விளைவிக்கும்படியானதாய் இருக்கிறது. கிழக்கு நோக்கிப் போவதற்கு சிரியாவை முதற்படியாக உபயோகிப்பதற்காக, ஜெர்மனி விஷி அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்திக்கொண்டு வருகிறது. அதைத் தடுப்பதற்கு அட்மிரல் தார்லானுக்கு வேண்டிய பலமும் கிடையாது; தடுக்க மனமுமில்லை. அச்சு அரசுகள் சிரியாவில் பிரவேசித்து, தரை வழியாக கிழக்கு நோக்கிச் செல்லலாம். அப்போது, இரானிலும், இராக்கிலும் உள்ள எண்ணெய்க் களஞ்சியங்களுக்குத் தீங்கு நேரும். அதல்லாமல், இந்தியாவின் பாதுகாப்பையும் பயப்படுத்தும்படியான நிலை ஏற்படும்.

## இராக்கில் நமது துருப்புகளின் பொறுப்பு.

ஹிட்லருடைய நோக்கம் இதுதான் என்பது இராக்கில் ஜெர்மனி செய்த சூழ்ச்சிகளால் தெரிகிறது. அங்குள்ள போக்கு வரத்து சாதனங்களைப் பாதுகாத்துவரும் இந்தியத் துருப்புகளும், ஏகாதிபத்தியத் துருப்புகளும், ஒரு பெரிய பொறுப்பை வகித்திருக்கின்றன. எகிப்தில் இருக்கும் துருப்புகள் எப்படி இந்தியப் பாதுகாப்புக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றனவோ, அதைப் போல இராக்கிலிருக்கும் துருப்புகள் இந்தியாவைப் பாதுகாத்துக் கொண்டு வருகின்றன. ஏனென்றால், இந்தியாவை நோக்கி இந்த வழியில் ஜெர்மனி வருவதை இராக்கில் தான் தடுக்கவேண்டும். பஸ்ராவைப் பிரிட்டன் கைப்பற்றியதால், பாரசீக வளைகுடாவிலிருந்து போக்கு வரத்து சௌகரியம் பிரிட்டனுக்கு இருக்கிறது. கடல் வழியாக இந்தியாவைத் தாக்குவது கஷ்டம். நிலத்தின் வழியாக வருவதை இராக்கில் பிரிட்டிஷ் துருப்புகள் தடுத்துக்கொண்டு வருகின்றன.

இது இப்படியிருக்க, இந்தியாவுக்குத் தென் கிழக்கில், பெரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மலேயாவில், இந்தியாவிலிருந்தும், ஏகாதிபத்திய இதர நாடுகளிலிருந்தும், திறமையான துருப்புகள் வந்து சேர்ந்திருக்கின்றன. சிங்கப்பூர்தான் இந்தியாவின் கிழக்கு அரண். எந்த எதிரி தாக்கினாலும், அதைத் தடுக்கும் வலிமை சிங்கப்பூருக்கு இருக்கிறது.

அச்சு நாடுகளில் ஒன்றாகிய ஜப்பானை எதிர்த்துப் போராடிக்கொண்டுவரும் சீனாவின் தைரியம் மிகவும் பாராட்டத் தக்கது. சமீபத்தில், ஒரு சீன ராணுவக் கோஷ்டியார், இந்தியா, பர்மா, மலேயா நாடுகளைச் சுற்றிப்பார்த்து, பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். சிங்கப்பூர் எந்த எதிரிக்கும் சரியான பதில் சொல்லும். ஆனால் இண்டோ—சீனா பலயீனமாயிருக்கிறது; அதன் மூலமாக பர்மாவுக்கு வந்து தரை வழியாக இந்தியாவைக் கிழக்கிலிருந்து தாக்கலாம்.

## தற்பாதுகாப்பின் அவசியம்.

இப்போதிருக்கும் நிலைமையில், இந்தியாவை, ஒரே காலத்தில், கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் தாக்குவதற்கு ஹிட்லர் முயற்சிக்கலாம். இந்த சமயத்தில், இந்தியர்களாகிய நாம் நமக்குள் இருக்கும் அபிப்பிராய பேதங்களை எல்லாம் மறந்து விட்டு, தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும், நமக்குள்ள பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். அப்போதுதான், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளும், அவைகளின் நேச நாடுகளும் ஒற்றுமையுடன் நடத்தும் போரில் நம்முடைய கடமையைச் செய்தவர்களாவோம். அமெரிக்காவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் அச்சு ஆதிக்கத்தை அழிக்க ஒரு மகத்தானதும், முடிவானதுமான முயற்சி செய்யப் போகின்றன. அது வரைக்கும் இந்தியா யார் தாக்கினாலும் அதை உறுதியுடன் தடுத்துத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

---

## ஹிட்லரின் அடுத்த முயற்சி.

ஹிட்லர் இனிமேல் துருக்கியையும், சிரியாவையும் கைப்பற்ற முயற்சிசெய்யலாம். அதற்குப்பின் தான் சைப்ரஸ் தீவைத் தாக்குவதற்கு சௌகரியங்கள் ஏற்படும். சைப்ரஸைப் பிரிட்டிஷார் பாதுகாக்கவேண்டுமென்றால், சிரியா தேசத்தார்கள் கையிலிருக்கவேண்டும். சிரியாவில் உள்ள பிரெஞ்சு துருப்புகளில் பிரிட்டனுக்கு அனுகூலமாகப் பலர் இருக்கிறார்கள். பாலஸ்தீனத்திலும், எகிப்திலும் இருக்கும் சுதந்தரப் பிரெஞ்சு துருப்புகளை அவர்களுக்கு உதவியாக அனுப்பி, முதலில், பீரட், டமாஸ்கஸ், என்ற இடங்களைக் கைப்பற்றவேண்டும். பிரிட்டன் சிரியாவைப்பற்றி சீக்கிரமான முடிவுக்கு வரவேண்டும். ஜெர்மனி அதை முழுவதும் கைப்பற்றுவதற்கு முன், பிரிட்டன் அதைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும். பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தங்களுடைய வேலையைச் செய்துகொண்டுதான் வருகின்றன. சிரியாவில் உள்ள அலெப்போ முதலிய ஜெர்மன் விமானத்தளங்களின் மேல் அடிக்கடி வெடிகுண்டுகளைப் போட்டுக்கொண்டே இருக்கின்றன.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.